<u>வாக்குமூலம்</u>

<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>

<u>வழக்கு எண் : CC.No. 111/2021</u>

<u>வழக்கு சாட்சி PW-4</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சுந்தரி | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | கந்தசாமி | தொழில் | : | பீடி சுற்றும் வேலை |
| கிராமம் | : | கடையநல்லூர் | வயது | : | 30 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of September 16th, 2025.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் கடையநல்லூரில் குடியிருந்து வருகிறேன். நான் பீடி சுற்றும் வேலை செய்து வருகிறேன். எதிரியை எனக்கு தெரியும். எனது பக்கத்துவீட்டுகாரர். சாட்சி சரண்யா, சுமதி, கிருஷ்ணம்மாள் ஆகியோர்களும் பக்கத்து வீட்டுக்காரர்கள். இந்த வழக்கு சம்பவம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை –**

நான் போலீஸ் விசாரணையில் கடந்த 22.07.2019ம் தேதி, இரவு 07.15 மணிக்கு நானும், எங்கள் தெருவைச் சேர்ந்த காளிப்பன் என்பவரும் எங்கள் தெருவில் நின்று பேசிக்கொண்டிருக்கும் போது, எதிரி அங்கு வந்து சரண்யாவையும், சுமதியையும் கெட்ட வார்த்தைகளால் பேசினார் என்றும், சரண்யா ஏன் இப்படி பேசுகிறீர்கள் என்று கேட்டபோது, எதிரி மீண்டும் அசிங்கமாக பேசிவிட்டு, அவரது கையில் வைத்திருந்த

அரிவாளால் சரண்யாவின் வலது கையிலும், முதுகிலும் வெட்டி இரத்தக்காயம் ஏற்படுத்தினார் என்றும், தடுக்க சென்ற சுமதியையும் அரிவாளால் வெட்டி காயப்படுத்தினார் என்றும், சம்பவத்தை பார்த்த நான், காளியப்பன், கிருஷ்ணம்மாள் ஆகியோர்கள் எதிரியை சத்தம் போடவும், எதிரி "இன்று தப்பித்து விட்டீர்கள், இருவரையும் வெட்டி கொன்று விடுவேன்" என்று மிரட்டி விட்டு கிழக்கு நோக்கி சென்று விட்டார் என்றும், காயம்பட்ட சரண்யாவையும், சுமதியையும் நானும், காளியப்பனும் அந்த வழியாக வந்த ஆட்டோவில் ஏற்றி கிருஷ்ணம்மாளை அவர்களுக்கு உதவியாக அனுப்பி வைத்ததாகவும், இது சம்பந்தமாக சரண்யா காவல்நிலையத்தில் புகார் கொடுத்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டதாக கேள்விபட்டதாகவும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது எதிரிக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> –

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.09.17 18:45:07 +0530

**<u>வாக்குமூலம்</u>**
**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**
**<u>வழக்கு எண் : CC.No. 111/2021</u>**
**<u>வழக்கு சாட்சி PW-5</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | காளியப்பன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | ரமேஷ் | தொழில் | : | கொத்தனார் வேலை |
| கிராமம் | : | கடையநல்லூர் | வயது | : | 44 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of September 16th, 2025.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் கடையநல்லூரில் குடியிருந்து வருகிறேன். நான் கொத்தனார் வேலை செய்து வருகிறேன். எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது தெருவிற்கு அடுத்த தெருவில் குடியிருந்து வருகிறார். சாட்சி சரண்யா, சுமதி, கிருஷ்ணம்மாள் ஆகியோர்களும் பக்கத்து வீட்டுக்காரர்கள். இந்த வழக்கு சம்பவம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை –**

நான் போலீஸ் விசாரணையில் கடந்த 22.07.2019 ம் தேதி, இரவு 07.15 மணிக்கு நானும், எங்கள் தெருவைச் சேர்ந்த சுந்தரி என்பவரும் எங்கள் தெருவில் நின்று பேசிக்கொண்டிருக்கும் போது, எதிரி அங்கு வந்து சரண்யாவையும், சுமதியையும் கெட்ட வார்த்தைகளால் பேசினார்

என்றும், சரண்யா ஏன் இப்படி பேசுகிறீர்கள் என்று கேட்டபோது, எதிரி மீண்டும் அசிங்கமாக பேசிவிட்டு, அவரது கையில் வைத்திருந்த அரிவாளால் சரண்யாவின் வலது கையிலும், முதுகிலும் வெட்டி இரத்தக்காயம் ஏற்படுத்தினார் என்றும், தடுக்க சென்ற சுமதியையும் அரிவாளால் வெட்டி காயப்படுத்தினார் என்றும், சம்பவத்தை பார்த்த நான், சுந்தரி, கிருஷ்ணம்மாள் ஆகியோர்கள் எதிரியை சத்தம் போடவும், எதிரி "இன்று தப்பித்து விட்டீர்கள், இருவரையும் வெட்டி கொன்று விடுவேன்" என்று மிரட்டி விட்டு கிழக்கு நோக்கி சென்று விட்டார் என்றும், காயம்பட்ட சரண்யாவையும், சுமதியையும் நானும், சுந்தரியும் அந்த வழியாக வந்த ஆட்டோவில் ஏற்றி கிருஷ்ணம்மாளை அவர்களுக்கு உதவியாக அனுப்பி வைத்ததாகவும், இது சம்பந்தமாக சரண்யா காவல்நிலையத்தில் புகார் கொடுத்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டதாக கேள்விபட்டதாகவும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது எதிரிக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u> –

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.09.17 18:45:14 +0530